# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

**புகார் மனு எண். (மூ.மு) 1682/ஊராட்சி /2018**

**ஆணை நாள்: 18–12–2018**

பி.எம்.குமார்,
டி. புத்தூர்,
நெடுஞ்சேரி அஞ்சல்,
காட்டு மன்னார் கோயில் தாலுக்கா. - மனுதாரர்

பிரகாஷ்,
ஊராட்சி செயலாளர்,
டி. புத்தூர் ஊராட்சி,
கடலூர் மாவட்டம். - எதிர்மனுதாரர்

## ஆணை

கடலூர் மாவட்டம், டி.புத்தூர் ஊராட்சியில் வசிக்கும் திரு. பி. எம். குமார், அவருடைய 4.12.2018 நாளிட்ட புகார் மனுவில் குமராட்சி ஒன்றியம், டி. புத்தூர் ஊராட்சியில் செயலராகப் பணிபுரியும் திரு. பிரகாஷ், பசுமை வீடு I.A.Y வீடு மற்றும் கழிவறைகள் கட்டித் தருவதாகவும், வீடு கட்டும் திட்டத்தில் பெயரை சேர்த்து விடுவதாகத் தெரிவித்து ரூ.20,000/- முதல் ரூ.30,000/- வரை லஞ்சமாக பெற்றுள்ளார் என்றும், பணம் கொடுத்த நபர்களுக்கு பணம் திரும்ப கொடுக்காமலும், வீடு கட்டி தராமலும் ஏமாற்றி மோசடி செய்து வருகிறார் என்றும், அரசு திட்டங்களை கிராம சபையில் பொதுமக்களிடம் மதிப்பீட்டையும், பணியின் விபரத்தையும் தெரிவிக்காமல் மூடி மறைத்து முறைகேடு செய்து வருகிறார் என்றும், இவர் செய்த முறைகேடுகள் மற்றும் லஞ்ச ஊழல்களை மறைக்க தனக்கு வேண்டியவர்களுக்கு அரசு திட்டங்களை ஒருதலை பட்சமாக

வழங்கி கிராமத்தில் அமைதியையும், ஒற்றுமையையும் சீர்குலைத்து கலவரத்தை ஏற்படுத்துகிறார் எனத் தெரிவித்து, அன்னாரை பணி நீக்கம் செய்யுமாறு கோரியுள்ளார்.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு 7ன்படி 'உள்ளாட்சி அமைப்பு' என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள்வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரர் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்பலாம் என முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும், இப்பொருள் குறித்து கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

20.12.18

பெறுநர்:

திரு. பி. எம். குமார்,
டி. புத்தூர், நெடுஞ்சேரி அஞ்சல்,
காட்டுமன்னார் கோயில் தாலுக்கா,
கடலூர் மாவட்டம் - 608 805.

நகல்:

1. மாவட்ட ஆட்சித்தலைவர்,
   கடலூர் மாவட்டம்,
   கடலூர் - (இணைப்புகளுடன்).
2. முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
3. செயலாளர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
4. ஊராட்சி பிரிவு.